**O.S.No. 27/2020**

வா.சா.1, திரு. பாண்டி
நாள் : 19.02.2026 நேரம் : 10.55AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தில் அந்தந்த நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் நிலத்தை பார்வையிட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 25 வருடங்களுக்கு முன்னர் எனது தாத்தா காலமாகிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எனது தாத்தா 1984, 1985 ஆண்டுகளில் உயிரோடு இருந்தார் என்றால் எனது தாத்தா இறந்த வருடம் எனக்கு தெரியாது. எனது தந்தை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு நினைவு இல்லை. 1990 ல் முன்னர் எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியாது. நான் எனது தகப்பனார் மற்றும் தாத்தாவின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2)எனது தகப்பனாருக்கோ அல்லது தாத்தாவுக்கோ தாவா சொத்தில் பாத்தியம் இருந்தால் தான் எனக்கு தாவா சொத்தில் பாத்தியம் வரும் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும், தாத்தாவுக்கும் தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது. மேற்படி சங்கதியை நிரூபணம் செய்ய எனது தகப்பனார் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரம் பூங்குட்டியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு 1974 ல் தாவா 1,2 ,8,9,10 லக்க சொத்துகளை எழுதி கொடுத்த பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் பட்டா பாஸ்புத்தகம் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. அதே போல் தாவா சொத்துகளுக்கு நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் தெரிந்திருந்தும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3)உண்மையில் எனது தகப்பனாருக்கு தாவா சொத்துகளில் பாத்தியம் இருந்திருந்தால் சட்ட நடவடிக்கைகள் எடுத்திருப்பார் என்றாலும், பாத்தியம் இல்லாததால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது அனுபவத்தை பிரதிவாதிகள் தடையிடர் செய்யக்கூடாதென்று நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் தான் கோரியுள்ளேன் என்றாலும், மோசடியாக எனது பிராது 2வது பத்தியில் பாகம் பிரிக்காமல் தாவா சொத்தில் கூட்டனுபவத்தில் இருப்பதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கூட்டனுபவத்தை நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகளை பொறுத்து எனது தகப்பனாருக்கோ, எனக்கோ, எனது உடன் பிறந்தவருக்கோ எந்த காலத்திலும் பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல.

4)1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 54/2 தாவா 8வது லக்க சொத்தான 2 ஏக்கர் 24 1/2 சென்ட்டை 1ம் பிரதிவாதி முத்தையா நாயக்கர் மகன் ராமராஜருக்கு எழுதி கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் 1ம் பிரதிவாதி 45 நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார். தோப்பு, லிங்கம், அமராவதி, ஆனந்தம்மாள், பொ கருப்பையா . நவநீதிகிருஷ்ணன் உட்பட 45 நபர்களுக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் கிரையம் பெற்ற பின்னர் அவர்கள் பெயருக்கு பட்டா மாற்றி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் பெற்றவர்களின் அனுபவத்தில் தான் கிரையம் பெற்ற தாவா 8வது லக்க சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

5)அதேபோல் அவர்கள் கிரையம் பெற்ற பத்திரங்களை பொறுத்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த 2 ஏ்க்கர் 24 1/2 சென்ட் போக மீதமுள்ள 3 ஏக்கர் 15 சென்ட் இடத்தை 1ம் பிரதிவாதி அவரது மகனான பாலமுருகனுக்கு இனாம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் மகனுக்கும், மருமகளுக்கும் இனாம் எழுதி கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி தனது மகனுக்கும் மட்டும் தான் 3 ஏக்கர் 15 சென்ட் இனாம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இனாமின் அடிப்படையில் பாலமுருகன் தன் பெயருக்கு பட்டா மாற்றி உட்பிரிவு செய்து சர்வே எண். 54/2 ஏ 2 ஐ அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது அத்தையான 2ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 50 சென்ட்டை 1ம் பிரதிவாதி கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாலமுருகனை வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் அவர்கள் எழுதி கொடுத்த பத்திரத்திற்கும் பரிகாரம் கோரவில்லை என்றாலும் சரிதான்.

6)தாவா 9 வது லக்க சொத்தான சர்வே எண். 73/4 பி, பள்ளிக்கூடத்திற்கு எழுதி கொடுத்தது போக மீதமுள்ள சொத்தை சர்வே எண். 73/6 என உட்பிரிவு செய்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமராஜருக்கு எழுதி கொடுத்துவிட்டார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண். 73/6 ஐ நான் 10 வது லக்க சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூங்குட்டியம்மாள் இனாமாக எழுதி கொடுத்த சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் 18 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சுமார் 10 நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும் அவர்கள் வீடு கட்டி குடியிருக்கிறார்கள் என்றாலும் சரிதான். மேற்படி நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்ட இடம் ராமராஜருக்குரிய பாக சொத்து.

7)நான் சொல்வது போல ராமராஜக்கு பாகமாக கொடுக்கப்படவில்லை என்றாலும் கிரையமாக தான் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி சர்வே எண். 73/6 ல் கிரையம் கொடுத்தவர்களையும் வழக்கில் தரப்பினர்களாக

சேர்க்கவில்லை என்றாலும் மேற்படி கிரைய பத்திரங்களுக்கு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றாலும் சரிதான். சர்வே எண். 73/6 ல் உட்பிரிவாகியாகிய சர்வே எண். 73/7 என்பது எனது தம்பி குமார் என்பவர் 35 சென்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் எனது மகன் வீரகுமாரும் 10 சென்ட் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள இடத்தை 1ம் பிரதிவாதி தனது மகனுக்கு இனாம் செட்டில் மென்ட் ஏற்படுத்தி பட்டா மாறுதல் செய்து அவரின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் தாவா 11வது லக்க சொத்தில் 7 1/2 சென்ட்டை கருப்புசாமி மனைவி பாண்டியம்மாள் 2013 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

8)கருப்புசாமி மனைவி பாண்டியம்மாளிடமிருந்து 2013 ல் 1ம் பிரதிவாதி மகன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு அவசிய கட்சிக்காரர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் விற்றது போக மீதமுள்ள சொத்துகளுக்கு 1ம்பிரதிவாதி மற்றும் அவரது மகன் பாலமுருகன் பெயரில் பயிர் காப்பீடு மற்றும் தீர்வை ரசீதுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2,3 வருடங்களாக தான் 1ம்பிரதிவாதி பெயரில் தாவா சொத்துகளுக்கு ரசீது ஏற்பட்டுள்ளது அதற்கு முன்னர் நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம். மேற்படி அனுபவம் செய்ததற்கான எனது பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கில் வியாஜ்ஜியமூலம் இல்லை என்றாலும் நீதிமன்ற கட்டணம் சரியாக கட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**5,6 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1)1ம்பிரதிவாதி 3,4 பிரதிவாதிகளுக்கு பத்திரவு பதிவு செய்வதற்கு முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ பத்திர பதிவு அலுவலகத்தில் பத்திர பதிவு செய்யக்கூடாது என்று தடங்கல் மனு கொடுத்தேனா என்றால்

கொடுத்தேன். மேற்படி சங்கதியை எனது பிராதிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றாலும் மேற்படி தடங்கல் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பத்திர பதிவு செய்யும் போது 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்து என்பதால் பட்டாவின் அடிப்படையில் பத்திர பதிவு செய்தது சட்டப்படி சரியானது என்றால் சரியல்ல. அரசாங்க அதிகாரி சரியான ஆவணங்கள் இருந்ததால் பத்திர பதிவு செய்தார் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.45 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.19 16:23:37 +0530